முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 1048

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

12.08.2022, வெள்ளிக்கிழமை

1. தர்ம பலம் கொண்ட அரசனே
   தவபலம் மிக்க அரங்கனே
   வறுமை போக்கி உலகை மீட்க
   வள்ளலாய் வாழும் ஞானியாய் வந்த ஞான தேசிகனே
2. தேசிகனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
   தெரிவிப்பேன் ஞான அறிவுரை ஆசி
   (சுபகிருது வருடம் ஆடி மாதம் 27 நாள், 12.08.2022 வெள்ளிக்கிழமை)
   ஆசிதந்து உலகமக்களை அரங்கன் நீ
   ஞானியாக்க அவதாரம் எடுத்துள்ளாய்
3. உள்ளபடி உன் நோக்கத்தை உயர்வாக ஆறுமுகப்பெருமான் யான்
   உள்ளிருந்து இனிதே நிறைவேற்றுவேன்
   நிறைவேற்றி கலியுக மக்களை
   நீதிமான்களாய் நிலவுலகை காக்கும்
4. ஆற்றல்மிக்க சக்திகளாக மாற்றி
   அரங்கன் உன் வழி அற்புதம் நடத்துவேன்
   நடத்தவே அரங்கன் உன்னை தொடரும்
   நாட்டிடுவேன் உலக மக்கள் அனைவருக்கும் ஞானியாகும் வாய்ப்பு உறுதி ஆகும்
5. ஆகவே அரங்கன் உன் திருவடி பற்றி
   அகிலத்தில் உயர் சேவை ஆற்றுகின்ற
   அகிலத்தார் அனைத்து போர்கட்கும்
   ஆறுமுகன் என் அருளும் ஆசியும் தயவும் உண்டுஉண்டு
6. உண்டான உன்னுள்ளே ஞானத்தை தீட்சைபலத்தை
   உயர்வாக உலகோர்க்கு யானே உன் கரம்பட அருளுகின்றேன்
   அருளவே அரங்கன் ஞானம்
   ஆறுமுகன் என் ஞானமாகும்
7. அரங்கன் தருகின்ற உபதேசமெல்லாம்
   ஆறுமுகன் என் உபதேசமாகும்
   ஆகவே உலகோர் ஏற்று பணிந்து வர
   அகிலம் சடுதி ஞானயுக மாற்றம் காணக்கூடும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–